**காலாண்டுத் தேர்வு – செப்டம்பர் 2023**

**வகுப்பு–8**

**தமிழ்**

**விடைக்குறிப்பு (வினாத்தாள் – 1)**

**மொத்தமதிப்பெண்– 100**

**பகுதி– I**

**I. சரியான விடையைத் தெரிவுசெய்து எழுதுக.** 10x1= 10

1. ஈ) கல்வி
2. இ) உணவின்
3. அ) தாயாக
4. ஆ) கல்லாதவர்
5. ஆ) தந்தை பெரியார்
6. ஆ) ஓடை
7. ஆ) காலனை
8. இ) இவை + உண்டார்
9. இ) விளி
10. இ) திரு.வி.க

**II. கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5x1= 5

11. இரத்தக்கொதிப்பு / சர்க்கரை நோய்
12. மரபு
13. வளர்ச்சி
14 . கவிமணி தேசிக விநாயகன ர்
15. மூன்றாம்

**III. பொருத்துக.** 5x1= 5

16. அளபெடை
17. வாணிதாசன்
18. பெயரெச்சம்
19. நீலகேசி
20. ரங்கராஜன்

**பகுதி– II**

**IV. அடி பிறழாமல் எழுதுக.** 4+2=6

21 ஓடை ஆட உள்ளம் தூண்டுதே! – கல்லில்
உருண்டு தவழ்ந்து நெளிந்து பாயும்
(ஓடை ஆட )
பாட இந்த ஓடை எந்தப்
பள்ளி சென்று பயின்ற தோடி!

ஏடு போதா இதன்கவிக் கார்
ஈடு செய்யப் போரா ரோடி
(ஓடை ஆட....)
நன்செய் புன்செய்க்கு உணவை ஊட்டி
நாட்டு மக்கள் வறுமை ஓட்டிக்
கொஞ்சிக் குலவிக் கரையை வாட்டிக்
குளிர்ந்த புல்லுக்கு இன்பம் கூட்டி
(ஓடை ஆட.....)
நெஞ்சில் ஈரம் இல்லார் நாண
நீளு ழைப்பைக் கொடையைக் காட்டிச்
செஞ்சொல் மாதர் வள்ளைப் பாட்டின்
சீருக்கு ஏற்ப முழவை மீட்டும்
(ஓடை ஆட....)
எவையேனும் நான்கு வரிகள் இருப்பின் மதிப்பெண் வழங்குக

**(அல்லது)**

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் – முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக்கு அழகுசெய் வார்

22. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு

## பகுதி – III

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 5x2= 10

23. தமிழ்மொழிச் சொற்களை வழங்குவதில் மரபு மாறினால் பொருள் மாறிவிடும்.

24. கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை.

25. நடுவுநிலைமையு ன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

26.

- நல்லறிவு
- நற்காட்சி
- நல்லொழுக்கம்

27. ஓடை, சலசல என்று ஒலியை எழுப்பியபடி ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்.

28. கொல்லிமலை, சித்தர்கள் வாழும் பகுதியாகும்.

29. காற்றின் தூய்மையும் நீரின் உயர்வும் யாருக்கும் சொந்தமானவை அல்ல. எனவே, அவற்றை விலைகொடுத்து வாங்க இயலாது எனச் சியாட்டல் கூறுகிறார்.

**VI. ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 5x2=10

30. உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு தலை கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே எழுத்துகளின் பிறப்பு என்பர்.

31.

- ❖ தெரிநிலை வினையெச்சம்
- ❖ குறிப்பு வினையெச்சம்

32. நான்காம் வேற்றுமை கொடை பகை, நட்பு, தகுதி, அதுவாதல் பொருட்டு, முறை, எல்லை எனப் பலபொருள்களில் வரும்.

33. பொருள் முற்றுப் பெறாத வினைச்சொற்களை முற்றுவிை அல்லது வினைமுற்று என்கிறோம்.

எ.கா – மலர்விழி எழுதினாள்

34. கருத்தாப்பொருள் இரண்டு வகைப்படும். அவை

- ❖ ஏவுதல் கருத்தா
- ❖ இயற்றுதல் கருத்தா

35. தெரிநிலை வினைமுற்று செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற ஆறு பொருள்களைக் காட்டும்.

36. அ) வருக – வா

ஆ) கேட்டார் – கேள்

**VII. எவையேனும் ஐந்து வின க்களுக்கு மட்டும் விடையளிக்க.** 5x3= 15

37. நெடிலைக் குறிக்க ஒற்றைப் புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் துணைக்கால் (ா) பயன்படுகிறது. ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் இணைக்கொம்பு (ை) பயன்படுகிறது. ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப்பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் கொம்புக்கால் (ள) பயன்படுத்தப்படுகிறது

38. நோய் வந்த பின்பு மருத்துவமனைக்குச் செல்வதைவிட வருமுன் காக்கும் வாழ்க்கையை வாழக் கற்றுக்கொள்ளுங்கள். சரியான உணவு, சரியான உடற்பயிற்சி, சரியான தூக்கம் ஆகிய மூன்றும் உங்களை நலமாக வாழவைக்கும். விலை உயர்ந்த உணவுதான் சரியான உணவு என்று எண்ணாதீர்கள். எளிமையாகக் கிடைக்கக்கூடிய காய்கறிகள், கீரைகள், பழங்கள், சிறுதானியங்களை உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள். கணினித் திரையிலும் கைபேசியிலும் விளையாடுவதைத் தவிர்த்து நாள்தோறும் ஓடியாடி விளையாடுங்கள் இரவுத்தூக்கம் மிகவும் இன்றியமையாதது. உரிய நேரத்தில்

உறங்கச் செல்லுங்கள். அதிகாலையில் விழித்தெழுங்கள் உங்களை எந்த நோயும் அண்டாது.

39.

- தமிழிலேயே கல்வி போதிக்கத் தமிழில் போதிய கலைகள் இல்லையே சிறப்பான அறிவியல் கலைகள் இல்லையே எனச் சிலர் கூக்குரலிடுகிறார்.
- அவரவர் தாம் கண்ட புதுமைகளை முதல் முதல் தம் தாய்மொழியில் வரைந்துவிடுகிறார்.
- அவை பின்னே பல மொழிகளில் பெயர்த்து எழுதப்படுகின்றன. அம்மொழிபெயர்ப்பு முறையைத் தமிழர் கொண்டு ஏன் தாய்மொழியை வளர்த்தல் கூடாது?
- எழுத்துகளின்மேல் புள்ளியிடும் வழக்கம் இக் ாலத்தில் வழக்கொழிந்துவிட்டது.
- குறியீடுகளுக்குப் பல மொழிகளினின்றும் கடன் வாங்குவது தமிழுக்கு இழுக்காகாது.
- கலப்பில் வளர்ச்சி உண்டெடன்பது இயற்கை நுட் ம்
- தமிழை வளர்க்கும் முறையிலும் அளவிலும் கலப்பை க் கொள்வது சிறப்பு.
- ஆகவே, தமிழ் மொழியில் அறிவுக் கலைகள் இல்லை என்னும் பழம்பாட்டை நிறுத்தி அக்கலைகளை மொழிபெயர்த்து எழுதி தாய்மொழிக்கு ஆக்கம் தேடுவோம் என்னும் புதுப்பாட்டை பாடுமாறு சகோதரர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.
- கலைகள் யாவும் தாய்மெ ழி வழி மாணாக்கர்க்கு அறிவுறுத்தப் பெறுங்காலமே தமிழ்த்த மீண்டும் அரியாசனம் ஏறும் காலமாகும்.

40. நோயின் வகைகள் மூன்று வகைப்படும்.

- மருந்தினால் நீங்கும் நோய்கள்
- எதனாலும் தீராத தன்மையுடைய நோய்கள்
- அடங்கி இருப்பனபோல வெளித்தோற்றத்தில் தெரிந்தாலும் முற்றிலும் தீராமல் உள்ளு குள் இருந்து துன்பம் தருவன.

நோய் தீர்க்கும் ழிகள் :

அகற்றுவதற்கு அரியவை பிறவி துன்பங்கள் ஆகும். இவற்றைத் தீர்க்கும் மருந்துகள் மூன்று. நல்லறிவு, நற்காட்சி, நல்லொழுக்கம் என்பவையே அம்மருந்துகள்.

41 ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள் எம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவுகூர்பவை. இந்த நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டன்மார்களின் குரல்களே ஆகும். இந்த ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள். இவர்கள் தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள். எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர். குழந்தைகளுக்கு

உணவளிக்கின்றனர். இங்குள்ள ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீரன்று. எமது மூதாதையாரின் குருதியாகும். இவ்வாறு நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறுகிறார்.

42.

- ❖ ஒளிரும் மணிகளால் செய்யப்பட்ட அணிகலனுக்கு மேலும் அழகூட்ட வேறு அணிகலன்கள் தேவையில்லை.
- ❖ அதுபோல கல்வி கற்றவர்க்கு அவர் கற்ற கல்வியே அழகு தரும். ஆகையால் அழகு சேர்க்கும் பிற அணிகலன்கள் அவருக்குத் தேவையில்லை.

43. வள்ளி படித்தனள் மகிழ்ந்தாள்.

இத்தொடரில் 'படித்தனள்' என்னும் சொல் படித்து என்னும் வி யெச்சப் பொருளைத் தருகிறது. இவ்வாறு ஒரு வினைமுற்று எச்சப்பெ ள் தந்து மற்றொரு வினைமுற்றைக் கொண்டு முடிவது முற்றெச்சம் னப்படும்.

## பகுதி – IV

**VIII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 5x2= 10**

44. அ. <u>மந்தை</u> ஆ. நிரை

45. அ. <u>விழைவுத் தொடர்</u>

ஆ. உணர்ச்சித் தொடர்

46. தலைப்புக்கு ஏற்ற பொருத்தமான பதில் இருந்தால் மதிப்பெண் வழங்கலாம்.

47. தேன்சிட்டு, தேன்கூடு, சிட்டுக்குருவி, குருவிக்கூடு

48. "கூரன் இங்கு வந்தாளா? அவள் எங்குச் சென்றாள் என்று தெரியுமா?"

49. கல்வெட்டு, ஒவ்வாமை

## பகுதி V

**IX உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக. 5x1= 5**

50. அ. கற்பாறை, செ பேடு, ஓலை

ஆ. பொருள்களின் தன்மைக்கேற்ப அமைந்தன.

இ. பாறைகளில் செதுக்கும் போது

ஈ. நேர்க்கோடுகள் வளைக்கோடுகள்

உ. எழுதிய

## பகுதி VI

**X. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 3 x 8=24**

51 பொருத்தமான விடை இருப்பின் மதிப்பெண் வழங்குக.

52. பொருத்தமான விடை இருப்பின் மதிப்பெண் வழங்குக.

53. பொருத்தமான விடை இருப்பின் மதிப்பெண் வழங்குக.